செய்தி வெளியீடு நாள் : 01.09.2025

துறைமுகம் தொகுதி, வால்டாக்ஸ் சாலையில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள குளிரூட்டப்பட்ட புதிய பேருந்து நிறுத்தம் அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்து, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (01.09.2025) துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வால்டாக்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்திற்கான (AC Bus Shelter) பணியினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, **மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளான வால்டாக்ஸ் சாலை, ஒத்தவாடை தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளையும், வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம், 844 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டுத் திடல், சமூக நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் என **"ஒருங்கிணைந்த வளாகம்"** கட்டுமான பணிகளையும் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகளையும் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்களும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்களும் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.ஸ்ரீராமுலு, எம்டிசி இணை மேலாண் இயக்குநர் திரு.ராகவன், பொது மேலாளர் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன், தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு.பாலமுருகன், உள்ளாட்சித் பிரதிநிதிகள் திரு.எஸ்.முரளி, திரு.அபாரன்ஜி, திரு.ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.தாஹா நவீன், திரு.பரிமளம், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

VerifiedRealEstate™